FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319475

1. District : மாவட்டம் தென்காசி PS: சூழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 04/2026 முத.அ. எண் Date: 06.07.2026 நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 Sections பிரிவுகள்: 7(a) and 7A
(ii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 03.07.2026
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 10.00 hrs Time to : நேரம் வரை 16.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.07.2026 Time : நேரம் 10.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Municipal office, Tenkasi, 2 Km South East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V.பட்டமுத்து (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.வள்ளிக்கண்ணு
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 31.12.1968 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர் (g) Address : முகவரி நகர நிலவரிதிட்ட அலகு-2 தென்காசி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) A-1 திரு.பிரேம் ஆனந்த், காசாளர், தென்காசி நகராட்சி, A-2 திரு.M.மாரிமுத்து, துப்புரவு ஆய்வாளர் தென்காசி நகராட்சி, A-3 திருமதி.ஜெயபிரியா, உதவி பொறியாளர், தென்காசி நகராட்சி, A-4 திரு.கணேசன், இ1 பிரிவு உதவியாளர், தென்காசி நகராட்சி, A-5 திரு.K.ராஜா முகமது, த/பெ காஜா மைதீன், கதவு எண்.1-A/2, காயிதே மில்லத் புது தெரு, சங்கரன்கோவில், (ஒப்பந்ததாரர்), A-6 திரு.A.ஷேக் அப்துல் காதர், த/பெ அப்துல் மஜீத், கதவு எண்.72/20, பாறையடி 2வது தெரு, தென்காசி, (ஒப்பந்ததாரர்), A-7 திரு.M.சுப்பிரமணியன், த/பெ முத்தையா, கதவு எண்.107, நயினார் தெரு, தென்காசி, (தனி நபர்), A-8 திரு.R.நடராஜன் த/பெ ராமையா, கதவு எண்.23/2, கொத்தளம் தெரு, மேலூர், செங்கோட்டை (தனி நபர்).

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

No delay

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 06.07.2026-ம் தேதி காலை 10.00 மணிக்கு M.பால் சுதர், துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது தென்காசி நகர நிலவரிதிட்ட அலகு-2, தனி வட்டாட்சியர் திரு.V.பட்டமுத்து அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 03.07.2026-ம் இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் V.பட்டமுத்து, த/பெ வள்ளிக்கண்ணு, தனி வட்டாட்சியர், நகர நிலவரிதிட்ட அலகு-2, தென்காசி. பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி மாவட்டம். அய்யா, பொருள்: தென்காசி மாவட்டம் - நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – தென்காசி நகராட்சி அலுவலகத்தை 03.07.2026-ம் தேதி மாலை திடீர் இணை ஆய்வு செய்தபோது கணக்கில் காட்டப்படாத மற்றும் சந்தேகத்திற்குரிய லஞ்சபணம் ரூ.43,160/- கைப்பற்றியது நடவடிக்கை எடுக்க வேண்டுவது தொடர்பாக. தென்காசி மாவட்டம் தென்காசி நகராட்சி அலுவலக ஊழியர்கள் சான்று வழங்குவதற்காகவும்

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

6/7/26

6/7/2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

6.7.2026
13.00Hrs

Name பெயர் M. PAUL SUTHER.
Rank நிலை .....No எண் .....
DSP. VACB, Tenkasi

சொத்துவரி வசூல் செய்யும் பிரிவுகளிலும் லஞ்ச பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில் தென்காசி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலக வேண்டுகோளின்படி, தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய கண்காணிப்பாளர் திரு.M.பால் சுதர் அவர்களுடன் இணைந்து பெண் தலைமை காவலர் திருமதி.B.பிரவீனா மற்றும் காவலர்கள் உதவியுடன் தென்காசி நகராட்சி அலுவலகத்தை 03.07.2026-ம் தேதி மாலை 16.00 மணியளவில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் வரிவசூலில் ரூ.2,260/- கூடுதலாக காசாளர் திரு.பிரேம் ஆனந்த் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. நில அளவை பிரிவில் தென்காசி நகராட்சி டவுண் சர்வேயருக்கு உதவியாக இருந்த ஒய்வுபெற்ற புல உதவியாளர் திரு.R.நடராஜன் என்பவரிடமிருந்து ரூ.1,000/-ம், தென்காசி நகராட்சி துப்புரவு ஆய்வாளர் திரு.M.மாரிமுத்து என்பவரிடமிருந்து ரூ.2,400/-ம், சங்கரன்கோவில் காயிதேமில்லத் புது தெருவை சேர்ந்த ஒப்பந்ததாரர் திரு.K.ராஜா முகமது என்பவரிடமிருந்து ரூ.10,500/-ம், தென்காசி பாறையடி தெருவை சேர்ந்த ஒப்பந்ததாரர் திரு.A.ஷேக் அப்துல் காதர் என்பவரிடமிருந்து ரூ.2,000/-ம், தென்காசி நயினார் தெருவை சேர்ந்த திரு.M.சுப்பிரமணியன் என்பவரிடமிருந்து ரூ.25,000/-ம் ஆக மொத்தம் பணமாக ரூ.43,160/- கைபற்றப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரர் திரு.ராஜாமுகமது செல்போனில் அவரது G.Pay பரிவர்த்தனையை ஆய்வு செய்தபோது, திரு.ராஜா முகமது அவரது G.Pay எண் 9003779629-லிருந்து 25.06.2026 தேதியில் AE திருமதி.ஜெயபிரியா சொன்ன திரு.அம்மையப்பன் என்பவரின் செல்போன் எண்.9486911360-க்கு ரூ.10,000/- மும், 20.06.2026-ம் தேதியில் ரூ.20,000/-மும் அனுப்பியுள்ளார். தென்காசி நகராட்சி இ1 உதவியாளர் திரு.கணேசனின் 9843826271 என்ற எண்ணின் UPI ID-க்கு 12.08.2025ம் தேதி ரூ.5,000/- அனுப்பியுள்ளார். சங்கரன்கோவில் நகராட்சியில் பணிபுரியும் தற்காலிக பணியாளர் திருமதி.மல்லிகாவின் 8610760082 என்ற செல்போன் UPI ID-க்கு 25.10.2024-ம் தேதி ரூ.4,000/-மும், 27.10.2024-ம் தேதி ரூ.2,000/-மும், 10.04.2025-ம் தேதி ரூ.3,000/-மும் அனுப்பியுள்ளார். தூத்துக்குடி Quality control AE திருமதி.முத்துலட்சுமியின் 7502762422 என்ற செல்போன் எண்ணின் UPI ID-க்கு 24.06.2026-ம் தேதி ரூ.17,000/- மும், திருமதி.முத்துலட்சுமி சொன்னதன்பேரில் திருமதி.வேல்முருகம்மாள் என்பவரின் 9500743810 என்ற செல்போன் எண்ணின் UPI ID-க்கு 08.08.2025-ம் தேதி ரூ.50,000/- அனுப்பியுள்ளார். திரு.ராஜாமுகமது மேற்படி ரூ.1,11,000/- G.Pay பரிவர்த்தனைகளுக்கான screen shot எடுத்து கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி பணத்திற்கு மேற்படியார்கள் தகுந்த

முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்றதாகவும், சான்று வாங்குவதற்கு கொடுக்க கொண்டு வந்த பணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் வைப்பறையிட்டது. இது தொடர்பான செயல்முறை நடவடிக்கை 03.07.2026 மாலை 17.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த சாட்சிகள் திரு.பிரேம் ஆனந்த், தட்டச்சு ஆப்பாளர் திரு.M.மாரிமுத்து, உதவி பொறியாளர் திருமதி.ஜெயபிரியா, இ1 பிரிவு உதவியாளர் திரு.கணேசன், ஒப்பந்ததாரர்கள் திரு.K.ராஜா முகமது, திரு.A.ஷேக் அப்துல் காதர், தனி நபர்கள் திரு.M.சுப்பிரமணியன், திரு.R.நடராஜன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வைப்பறையிட்ட பணம், செயல்முறை நடவடிக்கை மற்றும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd.06.07.2026,(வ.பட்டமுத்து) தனி வட்டாட்சியர், நகர நிலவரி திட்டம், தென்காசி. அலகு-2. Sir, Received the complaint on 06.07.2026 at 10.00 hrs and registered a case in Tenkasi V&AC, Cr.No.04/2026 u/s 7(a) and 7A of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 r/w 106 BNSS on 06.07.2026 at 11.00 hrs Sd.M.Paul Suther, 06.07.2026 DSP, V&AC, Tenkasi.

03.07.2026-ம் தேதி தென்காசி மாவட்டம் தென்காசி - திருநெல்வேலி மெயின்ரோட்டில் ரோட்டின் தென்புறம் அணைக்கரைத்தெருவில் கதவு எண் 85ல் அமைந்துள்ள தென்காசி நகராட்சி அலுவலகத்தை தென்காசி நகர நிலவரிதிட்ட அலகு-2 தனிவட்டாட்சியர் திரு.V.பட்டமுத்து அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை: 1) திரு.V.பட்டமுத்து, தனி வட்டாட்சியர், நகர நிலவரிதிட்ட அலகு-2, தென்காசி. 2) திரு.M.பால் சுதர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி.

இன்று 03.07.2026-ம் தேதி பிற்பகல் 14.00 மணிக்கு தென்காசி நகராட்சி அலுவலக ஊழியர்கள் சான்று வழங்குவதற்காகவும் சொத்துவரி வசூல் செய்யும் பிரிவுகளிலும் லஞ்ச பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி தென்காசி நகர நிலவரிதிட்ட அலகு-2, தனி வட்டாட்சியர் திரு.V.பட்டமுத்து தலைமையில் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.பால் சுதர், பெண் தலைமை காவலர் திருமதி.B.பிரவீனா மற்றும் காவலர்கள் சகிதம் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 15.45 மணியளவில் காவல் வாகனம் TN 22 G 0995-ல் புறப்பட்டு தென்காசி பழைய பேருந்து நிலையம், தங்கபாண்டியன் ஆஸ்பத்திரி சிக்னல் வழியாக வந்து தென்காசி-திருநெல்வேலி ரோட்டின் தென்புறம் அணைக்கரை தெருவில் அமைந்துள்ள தென்காசி நகராட்சி அலுவலகத்திற்கு சுமார் 16.00 மணிக்கு

வந்து அலுவலகத்தில் மெயின் கேட்டில் ஒரு காவலரை நிறுத்திவிட்டு, அலுவலகத்தின் மேற்புறம் வழியாக தெற்கு நோக்கி வந்து பார்க்க, நகராட்சி அலுவலகத்தின் தெற்புறத்தில் வருவாய் வரிவசூல் செய்யும் அறை உள்ளது. மேற்படி அறையில் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட தற்காலிக பணியாளர் திருமதி.K.கிருஷ்ணவேணி இருந்தார். அவரிடம் இன்றைய வரிவசூல் பற்றி கேட்க ரூ.2,33,247/-க்கு பில் போடப்பட்டுள்ளதாகவும், ரொக்கமாக ரூ.1,15,353/- இருப்பதாகவும், மீதி பணம் மற்ற பில் கலெக்டர்கள் வசூல் செய்ததை இனிமேல் ஒப்படைப்பார்கள் என்று தெரிவித்தார். அவர் வைத்திருந்த ரசீதுகளோடு சரிபார்த்தபோது அது சரியாக இருந்தது. மேற்படி பணம் ரூ.1,15,353/-ஐ அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையின் கீழ்புறம் மாடிக்கு செல்லும் படிக்கட்டு உள்ளது. மாடிபடிக்கட்டுக்கு கீழ்புறம் வருவாய் பிரிவு உள்ளது. வருவாய் பிரிவில் வருவாய் ஆய்வாளர் திரு.ராம சுப்பிரமணியன், வருவாய் உதவியாளர்கள் திருமதி.சுப்புலட்சுமி, திரு.கணேசன், திரு.சிவபிரகாஷ், திரு.முருகன் ஆகியோர் இருந்தார்கள். அவர்களை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. வருவாய் பிரிவின் கீழ்பக்கம் கேபினில் காசாளர் பிரிவு உள்ளது. அதில் காசாளர் திரு.பிரேம் ஆனந்த் என்பவர் இருந்தார். மேற்படி காசாளரிடம் இன்றைய் வரிவசூல் பற்றி கேட்க அவர் கணினியில் இருந்து 03.07.2026-ம் தேதிக்கான Service Request Instument Type wise summery எடுத்து கொடுத்தார். மேற்படி Service Request-ன் படி திரு.பிரேம்குமாரின் IDயில் 47 ரசீதுக்கு ரூ.47,657/- வசூல் செய்திருப்பதாக தெரிவித்தார். ஆனால் அவர் வசூல் செய்து வைத்திருந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.13,063/- இருந்தது. இதுகுறித்து காசாளர் திரு.பிரேம் ஆனந்திடம் கேட்டபோது அவர் ரூ.10,801/-க்கான 18 பில் ரசீதுகளை கொடுத்தார். மீதி பணம் ரூ.36,856/-க்கான ரசீதுகள் பில் கலெக்டர்களிடம் கொடுத்துள்ளதாகவும், அவர்கள் வசூல் செய்தபின்னர் இன்று மாலை அல்லது நாளை காலை வந்து பணத்தை கொடுப்பார்கள் என்றும் தெரிவித்தார். இதுகுறித்து மேலாளர் திருமதி.ரத்தினத்திடம் கேட்டபோது அவரும் காசாளர் சொல்வது சரிதான் என்று சொன்னார். வருவாய் உதவியாளரிடம் பில் கொடுத்ததற்கு பதிவேடு ஏதும் பராமரிக்கவில்லை என்றும் சொன்னார். ரசீது இல்லாமல் அதிகமாக ரூ.2,260/- இருந்த பணத்தை குறித்து திரு.பிரேம் ஆனந்திடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் ரூ.2,260/-ம், ரூ.10,801/-க்கான 18 பில் ரசீதுகள் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. வரிவசூல் பணம் ரூ.10,801/-ஐ திரும்ப காசாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி கட்டிடத்தின் மாடியில் கீழ்பக்கம் மீட்டிங் ஹால் உள்ளது. மேல்பக்கம் நில அளவை பிரிவு அறையில் பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட செங்கோட்டை மேலூரை சேர்ந்த திரு.R.நடராஜன் என்பவரை விசாரணை செய்தபோது தான் களப்பணி உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், தற்போது நில அளவையருக்கு உதவியாக இருந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரது சட்டை பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது. மேற்படி பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.1000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.நடராஜனிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.1000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி நில அளவை பிரிவின் மேல்பக்கம் உணவு பாதுகாப்பு அலுவலர் அறை பூட்டப்பட்டு இருந்தது.

தென்காசி நகராட்சி அலுவலகத்தின் பின்புற வாசல் வழியாக உள்ளே வந்ததும் வாசலின் இடது புறம் நகரமைப்பு பிரிவு உள்ளது. அந்த அறையில் நகரமைப்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் இருந்தார். அவரிடம் சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. நகரமைப்பு பிரிவின் எதிரே ஆவண வைப்பறை பூட்டப்பட்டு இருந்தது. அதன் வடபுறம் மாடிக்கு செல்லும் படிக்கட்டு உள்ளது.

மேற்படி நகரமைப்பு பிரிவின் வடபுறம் பொது சுகாதார பிரிவு உள்ளது. மேற்படி அறையில் சுகாதார ஆய்வாளர் திரு.ரத்தினகுமார் திரு.சரவணன், திரு.கணேசன், திரு.மாரிமுத்து ஆகியோர் இருந்தார்கள். மேற்படி சுகாதார ஆய்வாளர்களில் திரு.மாரிமுத்துவை சோதனை செய்தபோது அவர் பையில் ரூ.140/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது தனது செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதால் ரூ.140/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது மேஜை டிராவரை சோதனை செய்தபோது அதில் ஒரு வெள்ளை கவரில் கத்தையாக பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.2400/- இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.மாரிமுத்துவிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.2400/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு.ரத்தினகுமார் திரு.சரவணன், திரு.கணேசன் ஆகியோரிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. மேற்படி அறையில் தற்காலிக பணியாளர் திருமதி.பரமேஸ்வரி என்பவர் வைத்திருந்த கைப்பையை சோதனை செய்தபோது அதில் ரூ.15,000/- மற்றும் ரூ.192/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் தன்னுடைய வங்கி கணக்கில் இருந்து எடுத்ததாகவும், அதற்கான ஆவணத்தை காண்பித்து, ரூ.192/- தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதால் மேற்படி பணம் ரூ.15,000/- மற்றும் ரூ.192/- ஆகியவற்றை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தற்காலிக பணியாளர் திருமதி.ஆனந்த சுந்தரியிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை.

மேற்படி பொது சுகாதார பிரிவின் வடபுறம் பொறியில் பிரிவு உள்ளது. மேற்படி அறையில் இருந்த ஓவர்சியர் திருமதி.சங்கரி, வரைவாளர் திரு.ஹரிஹரன், பணி ஆய்வாளர்கள் திரு.கார்த்திகா, திரு.முத்து கார்த்திக் ஆகியோரை சோதனை செய்தபோது அவர்களிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. மேற்படி அறையில் இருந்த உதவி பொறியாளர் திருமதி.ஜெயப்பிரியாவின் கைப்பையை சோதனை செய்தபோது அதில் ரூ.270/- இருந்தது. மேற்படி பணம் தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும் பொறியியல் பிரிவில் இருந்து அதன் எதிரே உள்ள பொதுப்பிரிவிற்கு சென்றபோது அதன் வாசலில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.ராஜாமுகமது என்பவர் தான் ஒப்பந்ததாரராக இருப்பதாகவும், AE திருமதி.ஜெயபிரியா மேடத்தை பார்க்க வந்ததாக சொன்னார். அவர் வைத்திருந்த சாம்சங்க் மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 9003779629 என்ற சிம் இருந்தது. மேற்படி எண்ணிற்கான வாட்ஸ்அப் மெசேஜ் பார்த்தபோது 25.06.2026 தேதியில் AE திருமதி.ஜெயபிரியா அவரது செல்போன் எண்.8220287780-ல் இருந்து திரு.ராஜாமுகமதுக்கு அம்மையப்பன் 9486911360 என்ற எண்ணை அனுப்பியதும், திரு.ராஜாமுகமது அந்த எண்ணிற்கு ரூ.10,000/- அனுப்பி அதற்கான screen shot எடுத்து திருமதி.ஜெயப்பிரியா எண்ணிற்கு அனுப்பியுள்ளார். மேற்படி பரிவர்தனையை வைத்து ராஜாமுகமதுவின் G.Pay பரிவர்த்தனையை பார்த்தபோது அம்மையப்பன் என்பவருக்கு 20.06.2026-ம் தேதியில் ரூ.20,000/- அனுப்பியுள்ளார். மேலும் மேற்படி G.Pay மூலம் 9843826271 என்ற எண்ணிற்கு 12.08.2025ம் தேதி ரூ.5,000/- அனுப்பியுள்ளார். அதுகுறித்து திரு.ராஜாமுகமதுவிடம் கேட்டபோது அவர் தென்காசி நகராட்சியில் இ! உதவியாளராக இருக்கும் திரு.கணேசனுக்கு அனுப்பியதாக தெரிவித்தார். மேலும் 25.10.2024-ம் தேதி ரூ.4,000/-மும், 27.10.2024-ம் தேதி ரூ.2,000/-மும், 10.04.2025-ம் தேதி ரூ.3,000/-மும் 8610760082 என்ற செல்போன் எண்ணின் UPI ID-க்கு அனுப்பியுள்ளார். இதுகுறித்து ராஜாமுகமதுவிடம் கேட்டபோது சங்கரன்கோவில் நகராட்சியில் பணிபுரியும் தற்காலிக பணியாளர் திருமதி.மல்லிகாவுக்கு அனுப்பியுள்ளதாக தெரிவித்தார். 24.06.2026-ம் தேதி ரூ.17,000/- 7502762422 என்ற செல்போன் எண்ணின் UPI ID-க்கு அனுப்பியுள்ளார். இதுகுறித்து ராஜாமுகமதுவிடம் கேட்டபோது தூத்துக்குடி Quality control AE திருமதி.முத்துலட்சுமிக்கு அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளார். 08.08.2025-ம் தேதி 7502762422 என்ற செல்போன் எண்ணில் இருந்து திரு.ராஜாமுகமதுவின் செல்போனில் வாட்ஸ்அப் மெசேஜிக்கு வேல்முருகம்மாள் 9500743810 என்ற செல்போன் எண் அனுப்பப்பட்டுள்ளது. ராஜாமுகமதுவின் G.Payல்

9500743810க்கான பரிவர்த்தனையை பார்த்தபோது மேற்படி எண்ணுக்கு 08.08.2025-ம் தேதி ரூ.50,000/- அனுப்பியதற்கான பரிவர்த்தனை உள்ளது. திரு.ராஜாமுகமதுவை சோதனை செய்தபோது அவரது சட்டை பாக்கெட்டில் ரூ.10,500/- மற்றும் ரூ.1,150/- இருந்தது. மேற்படி பணம் ரூ.1,150/- தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பணம் ரூ.10,500/- க்கு திரு.ராஜாமுகமது தகுந்த முகாந்திரம் சொல்லாததால் ரூ.10,500/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

திரு.ராஜாமுகமது அருகில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட தென்காசியை சேர்ந்த திரு.ஷேக் அப்துல் காதர் என்பவர் தான் நகராட்சியில் சிறு சிறு வேலைகள் காண்ட்ராக்ட் எடுத்து செய்வதாகவும், AE திருமதி.ஜெயபிரியா மேடத்தை பார்க்க வந்ததாக சொன்னார். அவரை சோதனை செய்தபோது அவரது சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.2,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் ரூ.2,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி பொதுப்பிரிவின் வாசல் அருகே நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.சுப்பிரமணியனை விசாரித்தபோது அவர் தனது தம்பி மகளின் பிறப்பு சான்றிதழில் இன்சியல் மாற்றம் செய்வதற்காக வந்ததாகவும், தம்பி மகள் பெயர் தெரியவில்லை என்றும் சொன்னார். அவரை சோதனை செய்தபோது அவர் பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது. அதனை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.25,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் ரூ.25,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பொதுப்பிரிவில் மேலாளர் திருமதி.ரத்தினம், உதவியாளர் திரு.பத்மா, திரு.கணேசன், கணக்காளர் திருமதி.முருகேஸ்வரி, சிறப்பு வருவாய் ஆய்வாளர் திரு.அப்துல் காதர் என்ற அபு, இளநிலை உதவியாளர் திரு.முருகேசன், திருமதி.ஹபிபா நஸ்ரின், திரு.பழனி தம்பிரான், திருமதி.ஆண்டாள், திரு.செந்தில் குமார், திருமதி.கஸ்தூரி, தொழில் நுட்ப உதவியாளர் திருமதி.உமா, தற்காலிக பணியாளர் திருமதி.சுந்தரி, திரு.விஜயராஜா ஆகியோரை சோதனை செய்தபோது அவர்களிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. உதவியாளர் திரு.கணேசன் வைத்திருந்த விவோ செல்போனை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 9843826271 என்ற சிம் இருந்தது. அதன் G.Pay ஆய்வு செய்தபோது 12.08.2025ம் தேதி ரூ.5,000/- ராஜாமுகமது செல்போனின் எண்ணில் இருந்து பெற்ற பரிவர்த்தனை இருந்தது.

பொதுப்பிரிவின் வடபுறம் நகராட்சி பொறியாளர் அறை இருந்தது. மேற்படி அறையில் யாரும் இல்லை. மேற்படி அறையை சோதனை செய்தபோது பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. மேற்படி அறையின் தெற்கில் மைய அறை உள்ளது. அந்த அறையில் வருவாய் வழுவூர் திருமதி.பிரபாவெங்கி, அலுவலக உதவியாளர் திருமதி.செல்வி, மேஸ்திரி திரு.முத்துகருப்பன், ஒப்பரேட் திரு.கண்ணன் ஆகியோரை சோதனை செய்தபோது அவர்களிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை.

தெற்கில் மைய அறையின் எதிரே அலுவலக மெயின் வாசலுக்கு வலதுபுறம் நகர் மன்ற தலைவர் அறை உள்ளது. அந்த அறையில் நகர்மன்ற தலைவர் திரு.R.சாதிர் இருந்தார். அவரிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. மேற்படி அறையில் தற்காலிக கணினி ஆபரேட்டர் செல்வி.மஹர்முதாள் ஆகியாவிடமும் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. நகர்மன்ற தலைவர் அறைக்கு தென்புறம் நகராட்சி ஆணையாளர் அறை உள்ளது. மேற்படி அறையில் யாரும் இல்லை. மேற்படி அறையை சோதனை செய்தபோது பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. தென்காசி நகராட்சி மேலாளர் திருமதி.ரத்தினத்திடம் பணியாளர்களின் கையிருப்பு பணப்பதிவேட்டை பற்றி கேட்டபோது அது பராமரிக்கப்படவில்லை என்று கூறினார். மேற்படி தனிநபர்கள். அலுவலக ஊழியர்களிடம் கைப்பற்றப்பட்ட பணம் மேற்படியாளர்கள் லஞ்சமாக அதிகாரிகளுக்கு கொடுக்கவோ அல்லது பொது மக்களிடம் லஞ்சமாக பெற்ற பணமாகவோ இருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் மொத்த பணம் ரூ.43,160/- கைப்பற்றப்பட்டது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கைகள் இன்று (03.07.2026) மாலை 17.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். V.பட்டமுத்து, தனி வட்டாட்சியர், தென்காசி நகர நிலவரிதிட்ட அலகு-2, தனி வட்டாட்சியர். ஒம்.மற்றும் சிலர்.

The original complaint, Proceedings dated 03.07.2026 of Special Tahsildar, Urban Land Tax Scheme Unit-II, Tenkasi and original FIR were sent to the Hon'ble Principal District Sessions Judge Tenkasi and copies sent to concerned higher officials.

3/7/2026
M. PAUL SUTHER
DSP. VAAC
Tenkasi.